G.W.O.P.No.93/2023

**PW.1** ஷீலா

17-03-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மனுவில் நான் குறிப்பிட்டுள்ள விலாசம் எனது தங்கையின் பெயரில் உள்ளது. ஆனால் அது அம்மாவின் சொத்தாகும். நாங்கள் நீலகிரியை சேர்ந்த படகர் இனத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். நான் பிறந்தது நீலகிரியில் உள்ள காட்டேரி கிராமம் என்றும், திருமணம் ஆகி சென்றது சோகத்துறை என்ற கிராமம் என்று சொன்னால் சரிதான். எங்கள் குல வழக்கப்படி சோகத்துறை கிராமத்தில் உறுப்பினராக இல்லை. காரணம் அந்த காலத்திலேயே எனது மாமனார், மாமியார் சோகத்துறையில் உள்ள அவரது சொத்துக்களை விற்று விட்டு எங்களது சொந்த கிராமமான காட்டேரியில் குடியேறினார்கள். அந்த கிராமத்தில் அவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். அவர்கள் இறந்த பின்பு நானும், எனது கணவரும் கோயமுத்தூருக்கு குடிபெயர்ந்து விட்டோம்., நான் பல வருடங்களாக எனது கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்தேன் என்று சொன்னால் தவறு. நான் கூறுவது தவறு என்றும் காட்டேரி கிராமத்திலும் நானும், எனது குடும்பத்தார்களும் உறுப்பினர்களாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆனால் நான் கிராமத்தில் வரி கட்டுகிறேனா என்றால், நான் கட்டவில்லை, ஆனால் அம்மா செலுத்தி கொண்டிருக்கலாம்.

எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள விவரங்களை நான் முற்றிலுமாக மறுக்கிறேன். நான் கூறுவது தவறு என்றும், எனது பிரமாண வாக்குமூலத்தில் எதையும் நான் மறுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. "துக்கிரி" என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்றால், "அதிர்ஷ்டம் இல்லை" என்று அர்த்தம். எனது மகளுக்கு குழந்தை கங்கா மருத்துவமனையில் பிறந்தது. பின்னர் குழந்தையையும் எனது மகளையும் எனது வீட்டிற்கு அழைத்து சென்றேன். குழந்தை பிறந்த பிறகு 55 வது நாளில் என் மகள் காலமாகி விட்டார். அதனால் சுமார் ஒரு வருட காலம் குழந்தை எனது வீட்டில்தான் இருந்தார், நான் தான் குழந்தையை வளர்த்து வந்தேன். குழந்தையின் முதல் பிறந்த நாள் எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து நடந்தது என்று சொன்னால், சரிதான். பின்னர் அது எங்கள் வீட்டிலும் நடந்தது என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் இரு புகைப்படங்களும் குழந்தையின் முதல் பிறந்த நாள் புகைப்படம் என்று சொன்னால் சரிதான். அந்த புகைப்படங்கள் இரண்டும் **எ.ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்கள் குழந்தையின் இரண்டாவது பிறந்த நாளின் புகைப்படங்கள் என்றால் சரிதான். இரண்டாவது பிறந்த நாள் எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து கொண்டாடப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மூன்று புகைப்படத்திலும் நானும் இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அந்த மூன்று புகைப்படங்களும் **எ.ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குழந்தையின் இரண்டு பிறந்த நாள் வரை எதிர்மனுதாரரோடும், அவரது குடும்பத்தாரோடும் நல்ல உறவோடுதான் நாங்கள் இருந்தோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் குன்னூர் அருகில் உள்ள ஜெகதலா என்ற ஊரை சேர்ந்தவர். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் காணப்படுவது எங்களது பேரக்குழந்தைதான். முதல் மொட்டையானது ஜெகதல கிராமத்தில் வைத்து அடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த புகைப்படத்தில் உள்ள கோயமுத்தூரில் உள்ள எங்களது வீடுதான். அந்த புகைப்படம் **எ.ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குழந்தைக்கு முதல் முடி எடுக்கும் சமயத்தில் நாங்களும் குடும்பத்தாரோடு ஜெகதல கிராமத்திற்கு சென்று பங்கேற்றோம் என்று சொன்னால் சரிதான்.

எனது மகள் இறந்த பின்பு இரண்டு வருடங்கள் கழித்து எனது மருமகனுக்கு மறுமணம் செய்து வைக்க எங்களது சொந்த கிராமமான காட்டேரிக்கு சென்று பெண் தேடினேன் என்று சொன்னால், சரிதான். மகள் இறந்த பின்பு சுமார் 21/2 வருட காலம் எங்கள் குடும்பம் மற்றும் எதிர்மனுதாரர் குடும்பம் நல்ல உறவோடுதான் இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன விவரங்களை எதிர்மனுதாரர் அவருடைய எதிருரையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரருக்கு பூர்ணிமா என்ற பெண்ணுடன் திருமணம் நிச்சியம் ஆன விவரம் எனக்கு தெரியும். 01-02-2023 ல் எதிர்மனுதாரருக்கும், பூர்ணிமாவுக்கும் திருமணம் நடப்பதாக இருந்த விவரம்

எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. எனது மனுவில் 01-02-2023 ல் அவர்களுக்கு படுகர் இன முறைப்படி திருமணம் நடக்க இருந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அது நடந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் இந்த அசல் மனுவை 25-01-2023 ல் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். குழந்தையை முதல் நாளிலிருந்து எதிர்மனுதாரர் வெறுக்க ஆரம்பித்து விட்டார் என்று மனுவில் கூறியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் வேண்டுமானால் நீங்கள் மறுமணம் செய்து கொள்ளுங்கள் குழந்தையை எனது தங்கையிடம் கொடுத்து விடுங்கள் என்று நான் கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் அந்த விவரத்தை பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த விவரத்தை மறுத்து எனது முதல் சாட்சியத்தில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. ஆனால் அந்த விவரத்தை நான் மறுக்கிறேன். நான் கூறுவது தவறு என்றும், எனது தங்கைக்கு குழந்தையை தத்து கேட்டது சம்மந்தமாக பிரச்சனையாகி அது சம்மந்தமாக ஜெகதல கிராமத்தில் பஞ்சாயத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், அவ்வாறு பஞ்சாயத்து நடந்தது என்றும், அந்த பஞ்சாயத்தில் குழந்தை தந்தையுடன் இருக்கவேண்டும் என்று முடிவானது என்று சொன்னால் சரியல்ல. காரணம் பஞ்சாயத்தில் என்னை நீதிமன்றத்தை அணுகுமாறு கூறினார்கள். அதற்கு

ஆதவாக நான் பஞ்சாயத்தாரை அழைத்து விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால், தயாராக இருக்கிறேன்.

நான் அரசு உத்தியோகத்தில் இதுவரை இருந்ததில்லை. எனக்கென்று தனியாக வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காளான் வளர்ப்பு தொழில் செய்து வருகிறேன். குழந்தையை எதிர்மனுதாரர் எடுத்து சென்ற பிறகு நான் மத்தம்பாளையம் வந்து காளான் வளர்ப்பு தொழில் செய்ய ஆரம்பித்தேன். ஆனால் அந்த விவரங்களை எனது மனுவிலோ, எனது முதல் சாட்சியத்திலோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் காளான் தொழில் செய்கிறேன் என்று கூறுவதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும், நான் எந்த தொழிலும் செய்யவில்லை என்றும், நான் முற்றிலுமாக மற்றவர்களையே சார்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிறு குழந்தையை வளர்க்க எனது சகோதரி எனக்கு பண உதவி செய்வார் என்று நான் கூறுவது வழக்கிற்காக என்று சொன்னால் சரியல்ல.

எனது மகள் இறந்த பின்பு நான் மன அழுத்தத்திற்காக மருந்து எடுத்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு பொருளாதார ரீதியாக உதவுவதற்கும், மன ரீதியாக உதவுவதற்கும் யாரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகள் எதிர்மனுதாரரை திருமணம் செய்த காலத்தில் விப்ரோ நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். எதிர்மனுதாரர் தனது குழந்தைக்கு ஆதார்

கார்டை நீலகிரி மாவட்டத்தில் வைத்து எடுத்தார் என்று சொன்னால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் குழந்தையை பார்ப்பதற்கு மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் குழந்தையை சென்று நான் பார்த்த சமயத்தில் குழந்தையின் பற்கள் அனைத்தும் கருப்பாகவும், முன் பக்கம் இரண்டு பற்கள் இல்லாத நிலையிலும் இருந்தார். மேற்சொன்ன விவரத்தை இதற்கு முன்பு இந்த நீதிமன்றத்தில் நான் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். குழந்தையை நீதிமன்ற உத்திரவின்படி சரியாக அழைத்து வருகிறார்கள். நானும் நீதிமன்ற உத்திரவுப்படி குழந்தையை பார்த்து வருகிறேன். குழந்தையை குன்னூரில் உள்ள வெல்லிங்டன்னில் உள்ள ஒரு பள்ளியில் சேர்த்துள்ள விவரம் எனக்கு தெரியும். தற்போது குழந்தை யு.கே.ஜி படித்து வருகிறான். குழந்தையை எதிர்மனுதாரர் தந்தை என்ற அடிப்படையில் நன்றாக வளர்த்து வருகிறார் என்றும், எந்த பாதுகாப்பு குறைபாடும் இல்லை என்று சொன்னால், சரிதான். குழந்தையின் கல்வி கட்டணங்கள் அனைத்தையும் எதிர்மனுதாரர்தான் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான். அதனால் எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

sd/ ஷீலா,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.